## DEPOSITION OF WITNESS

(Chapter XXII Code of Criminal Procedure)

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS COURT, ARIYALUR.**

| | |
|---|---|
| Case No: | **SPL.S.C.No.20/2024** |
| Prosecution Witness : | **LW - 4 / PW - 6** |
| Name : ராமதாஸ் | Taluk : |
| S/o. : | Age : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the Day **17.06.2026**

(எதிரிகள் ஆஜர்)

**முதல் விசாரணை**

நான் ரெட்டிபாளையத்தில் வசித்து வருகிறேன். அ.சா.1 ராஜேஸ்வரியையும் எதிரிகளையும் தெரியும். 2 வருடங்களுக்கு முன்பு நான் இரும்பு வியாபாரத்திற்காக வியாபாரம் செய்து திரும்பும்போது, ரெட்டிபாளையத்தில் சுப்பிரமணியன் வீட்டிற்கு முன்பு தகராறு நடந்தது. இதில் அன்புதுரை, ராஜா, தனலெட்சுமி ஆகியோர்களுக்கும் ராஜேஸ்வரிக்கும் இடையே தகராறு நடந்தது. அன்புதுரை கட்டையை எடுத்து கொண்டு சுப்பிரமணி வீட்டிற்குள் நுழைந்து அசிங்கமாக பேசினார். சாதியை பற்றி பேசினார்கள். சாதியை பற்றி என்ன பேசினார்கள் என்றால் அது தெரியாது, சாதியை தான் பேசினார்கள். இருதரபினர்களும் அடித்து கொண்டார்கள். அங்கு நேரம் ஆகிவிட்டதால் நான் கிளம்பிவிட்டேன். என்னை போலீசார் விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

அப்போது நேரம் என்ன இருக்கும் என்றால் 12.00 மணி இருக்கும். போலீசார் என்னை விசாரித்தபோது, நான் வியாபாரத்திற்காக தான் அங்கு போனேன் என்று சொல்லியிருக்கிறேனா என்றால் சொல்லியிருக்கிறேன். நான் நீதிமன்றத்தில் சொன்ன விவரத்தை தான் போலீசாரிடம் சொன்னேனா என்றால் போலீசாரிடம் சொன்னது எனக்கு ஞாபகம் இல்லை. எனக்கும் ரெட்டிபாளையம் தான் ஊர் என்றால்

சரிதான். ராஜேஸ்வரிக்கும் எதிரிகளுக்கும் இடப்பிரச்சனைக்காக சிவில் வழக்கு நடப்பது எனக்கு தெரியுமா என்றால் அது எனக்கு தெரியாது. அவர்களுக்கு தான் அவர்கள் சிவில் வழக்கு பற்றி தெரியும். போலீசாரிடம் நான் சம்பவம் பற்றி கேள்விபட்டதாக சொன்னேனா என்றால் இல்லை, முதல் விசாரணையில் சொல்லியுள்ளவாறு தான் சொன்னேன். நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலீசார் விசாரணையில் அன்புதுரை கட்டை எடுத்து கொண்டு சுப்பிரமணியன் வீட்டிற்குள் போனதாக போலீசாரிடம் சொன்னேனா என்றால் அது தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. நான் வியாபாரத்திற்கு போனபோது சண்டையை பார்த்தேனா என்றால் ஆமாம். நான் சண்டையை விலக்க முயற்சி செய்தேனா என்றால் இல்லை. அ.சா.1 கேட்டு கொண்டதற்க்கிணங்க நான் சண்டையை பார்க்காமலேயே பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை–**இல்லை.

(ஒம்) – திருமதி.T.மலர்வாலண்டினா,
முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
அரியலூர்.

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXII Code of Criminal Procedure)
**<u>IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS COURT, ARIYALUR.</u>**

| | |
|---|---|
| Case No: | **SPL.S.C.No.20/2024** |
| Prosecution Witness : | **LW - 5 / PW - 7** |
| Name : திருசங்கு | Taluk : |
| S/o. : | Age : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the Day
**<u>17.06.2026</u>**

**(எதிரிகள் ஆஜர்)**

**<u>முதல் விசாரணை</u>**

நான் ரெட்டிபாளையத்தில் வசித்து வருகிறேன். அ.சா.1 ராஜேஸ்வரியையும் எதிரிகளையும் தெரியும். சுமார் 2 வருடங்களுக்கு முன்பு நான் கடலை கொல்லையில் தண்ணீர் பாய்ச்சி விட்டு வீட்டிற்கு சாப்பிட வந்தேன், அப்போது வீட்டிற்கு முன்பு தெருவில் போலீசார் இருந்தார்கள். நான் வேறு எதுவும் கேள்விபட்டேனா என்றாலும், பார்த்தேனா என்றாலும் இல்லை, போலீசார் என்னிடம் கையெழுத்து தான் கேட்டார்கள்.

<u>மேற்சொன்ன சாட்சியை பிறழ் சாட்சியாக கருத கோரி அரசு தரப்பில் வேண்டுதல் வைத்து அதன்படி அவரை பிறழ் சாட்சியாக கருதி அவரை அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.</u>

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>**

போலீசார் விசாரணையில் கடந்த 22.01.2024 அன்று பகல் 12.00 மணியளவில் எங்கள் ஊர் பாப்பான்குளம் ஏரிக்கரையை ஒட்டி நானும், எங்கள் ஊரை சேர்ந்த ராமானுஜமும், ராமதாஸ்ம் நின்று கொண்டிருந்ததாகவும், அருகில் உள்ள சுப்பிரமணியன் வீட்டில் முத்தாயாவும், ராஜேஸ்வரியும் இருந்தார்கள் என்றும், அப்போது அண்ணாதுரை, அன்புதுரை, தனலெட்சுமி, அண்ணாதுரையின் மருமகன் ராஜா ஆகியோர் நால்வரும் சேர்ந்து கொண்டு ராஜேஸ்வரி வீட்டில் அத்துமீறி நுழைந்து, அண்ணாதுரை அன்புதுரையை பார்த்து பற தேவடியா மகனே என்றும்,

சாதி பெயரை சொல்லி திட்டியதாகவும், தனலெட்சுமி, ராஜா இருவரும் ராஜேஸ்வரியை பார்த்து சாதி பெயரை சொல்லி திட்டி, இங்கு குடியிருக்க கூடாது என்று மிரட்டினார்கள் என்றும், அப்போது ராஜேஸ்வரி நான் எங்கள் வீட்டில் குடியிருக்கிறேன் என்று சொன்னதாகவும், அன்புதுரை கழியால் ராஜேஸ்வரியின் இடது தொடையிலும், இடது முன்னங்கையிலும் அடித்தார் என்றும், அண்ணாதுரை அவரது கையால் ராஜேஸ்வரியின் நெஞ்சில் அடித்தார் என்றும், ராஜா ராஜேஸ்வரியின் கன்னத்தில் அறைந்தார் என்றும், இனி வீட்டில் குடியிருந்தால் வீட்டோடு கொளுத்தி விடுவோம் என்றும் மிரட்டினார் என்றும், அப்போது நான் உடனிருந்து சண்டையை விலக்கிவிட்டேன் என்று சாட்சியம் அளித்து விட்டு, தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை–இல்லை**</u>

<u>**மறு விசாரணை–**</u>இல்லை.

(ஒம்) – திருமதி.T.மலர்வாலண்டினா,
முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
அரியலூர்.